தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

எண். 37/2026 நாள்: 30.03.2026

செய்திக் குறிப்பு

ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு–I (தொகுதி I பதவிகள்)

(அறிவிக்கை எண்.04/2025)

மூலச் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் நேர்முகத் தேர்வுக்கான பட்டியல் வெளியீடு

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு–I (தொகுதி I பதவிகள்)–இல் உள்ள பதவிகளின் நேரடி நியமனத்திற்காக 01.04.2025 அன்று அறிவிக்கை வெளியிட்டது. இத்தெரிவிற்கான முதன்மைத் தேர்வுகள் 01.12.2025 மு.ப. முதல் 04.12.2025 மு.ப. வரை நடைபெற்றது. இத்தேர்விற்கு 1,801 தேர்வர்கள் முதன்மைத் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டனர். மேற்படி தேர்வினை 1,568 தேர்வர்கள் எழுதினர்.

மேற்கண்ட அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி, மூலச் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் நேர்முகத் தேர்வுக்கான (Physical Certificate Verification and Interview) 160 தேர்வர்களின் பதிவெண் கொண்ட பட்டியல் தேர்வாணைய வலைதளத்தில் (www.tnpsc.gov.in) 30.03.2026 அன்று வெளியிடப்பட்டுள்ளது. மூலச் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் நேர்முகத் தேர்வு 15.04.2026 மற்றும் 16.04.2026 ஆகிய நாட்களில் நடைபெறும்.

தேர்வர்கள், இது தொடர்பாக தேர்வாணைய இணையதளத்தினை (www.tnpsc.gov.in) தொடர்ந்து பார்வையிடுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

பானோத் ம்ருகேந்தர் லால், இ.ஆ.ப
செயலாளர் மற்றும் தேர்வுக் கட்டுப்பாட்டு
அலுவலர் (பொறுப்பு)